www.shaivism.org

தலம் திருவாலவாய்
பண் பழம் பஞ்சுரம்
மூன்றாம் திருமுறை

நாலடி மேல் வைப்பு

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வமுடைக் காரமண் தேரரை
எய்தி (1) வாதுசெய் யத் (2) திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையில் மாமழு வாளனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
முட்டு சிந்தை முருட்டமண் குண்டரை

ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை உரித்தஎங் கள்வனே
   ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
   ஆல வாயில் உறையும் எம் ஆதியே

அழல தோம்பும் அருமறை யோர்திறம்
விழல தென்னும் அருகர் திறத்திறம் (3)
கழல வாதுசெ யத்திரு வுள்ளமே
தழல் இ லங்கு திருவுருச் சைவனே
   ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
   ஆல வாயில் உறையும் எம் ஆதியே

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற் றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கும் அருளினாய்
   ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
   ஆல வாயில் உறையும் எம் ஆதியே

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலும் நான்முக னுக்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே
   ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
   ஆல வாயில் உறையும் எம் ஆதியே

அன்று முப்புரம் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெ யத்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே
ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே

திருச்சிற்றம்பலம்

(1) எய்த
(2) வாதுசெய்யத்
(3) திறங்களை

www.shaivism.org